தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான இலகுவழி மாதிரிப் பரீட்சை - 03

ஆசிரியர் : P.அம்பிகைபாகன்
இடம் : ACA, ஆசிரியரின் வீட்டில்
குழு வகுப்புக்களில்

1 ஆம் 2 ஆம் வினாக்களில் பிழையான கருத்துக்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

(1) 1) கோழியால் நடக்கவும் அதேவேளை பறக்கவும் முடியும்.
2) நாயால் குரைக்கவும் அதேவேளை கடிக்கவும் முடியும்.
3) மீனால் நீந்தவும் அதேவேளை நடக்கவும் முடியும்.

(2) 1) குளத்து நீர் நிலையாக நிற்கும் குடிக்கக்கூடியது.
2) கடல் நீர் ஓடும் குடிக்கக்கூடியது.
3) ஆற்று நீர் ஓடும் குடிக்கக்கூடியது.

ஐந்து மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தந்த நேரங்களை பின்வரும் கடிகாரங்கள் காட்டுகின்றன.


சந்திரன்


இந்திரன்


கமலா


விமலா


அகமட்

(3) முதலில் பாடசாலைக்கு வந்தவர் யார்?
1) சந்திரன் 2) இந்திரன் 3) அகமட் 4) விமலா

(4) பாடசாலை ஆரம்பிப்பது காலை 7.15 ஆகும். அன்றைய தினம் பிந்தி வந்தவர் யார்?
1) கமலா 2) இந்திரன் 3) அகமட் 4) விமலா

பின்வரும் தகவல்களைக் கொண்டு 5, 6 ஆம் வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.



1 தீப்பெட்டி
1 மெழுகுதிரி
விலை ரூபா 9.00



2 தீப்பெட்டி
3 மெழுகுதிரி
விலை ரூபா 23.50

(5) தீப்பெட்டி ஒன்றின் விலை யாது?
1) ரூபா 2.50 2) ரூபா 3.50 3) ரூபா 5.50 4) ரூபா 4.50

(6) மெழுகுதிரி ஒன்றின் விலை யாது?
1) ரூபா 2.50 2) ரூபா 3.50 3) ரூபா 5.50 4) ரூபா 4.50

7) கீழே தரப்பட்டுள்ள எண் கணிப்புக் கோலத்தை அவதானித்து வெற்றிடங்களுக்கு பொருத்தமான எண் சோடிகளைத் தெரிவு செய்க.

3  6  8  6

3  1  .....  .....

1) 1,2 2) 1,1 3) 2,4 4) 3,2

www.ikedu.lk

(8) நகர்புற பாடசாலைகளுக்கு முன்னுள்ள வீதியைக் கடப்பதற்கு பயன்படுத்த தவறான கடவை எது?

1) மஞ்சட் கோட்டுக் கடவை 2) மேம்பாலம்
3) சுரங்கப்பாதை 4) குறுக்கு வழி

(9) அடைப்புக்குள் உள்ள இலக்கங்களில் அதிக தடவைகள் உள்ள எண்ணால் குறைந்த தடவைகள் உள்ள எண்ணைப் பெருக்கினால் கிடைக்கும் விடை யாது?

6, 7, 2, 4, 3, 5, 9, 2, 3, 6, 8
2, 7, 9, 2, 9, 6, 3, 6, 5

1) 9 2) 12 3) 8 3) 18

(10) ஒரு சிறுவன் தனக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தவர் தனக்கு என்ன உறவுமுறை என்பதைக் கூறாது ஒரு புதிரைக் கூறினான். அப்புதிரை விடுவித்து அவர் என்ன உறவு முறை எனக் கண்டு பிடியுங்கள்.

எனக்கு பக்கத்தில் நிற்பவர் எனது தந்தையின் மனைவியின் தம்பியின் மகள் ஆவார்.

1) சகோதரன் 2) சகோதரி 3) மைத்துனன் 4) மைத்துனி

அடைப்பில் உள்ள சொற்களிலிருந்து விடுகதைகளுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

முட்டை, யானை, சுடுநீர், இளநீர், குதிரை, மீன், உப்பு, சீனி, ஒட்டகம்

(11) கடல் நீரில் வளர்வான் ஆனால் மழை நீரில் அழிவான். அவன் யார்?

.....

(12) கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டுவீடு, ஓட்டு வீட்டை உடைத்தால் வெள்ளை மாளிகை, வெள்ளை மாளிகைக்குள் குளத்து நீர் அது என்ன?

.....

(13) தண்ணியில்லாக் காட்டிலே அலைந்து திரிவாள் அழகி, முதுகிலே பாரத்தையும் முணங்காமல் சுமப்பாள் அவள் யார்?

.....

கீழுள்ள வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களின் கருத்தைத் தெரிவு செய்க.

(14) சிறுவர்கள் **மூதாதையரின்** அறிவுரைகளைக் கேட்பது நல்லது ஆகும்.

1) முன்னோர் 2) பெற்றோர் 3) சான்றோர் 4) நல்லவர்

(15) கதிரவன் எவ்வேளையும் **கந்தல்** ஆடையே அணிந்து இருப்பான்.

1) அழகான 2) கவர்ச்சியான 3) பெரிய 4) கிழிந்த

(16) எனது அக்காவின் **அகவை** இருபது ஆகும்.

1) நிறை 2) நிறம் 3) வயது 4) தரம்

(17) சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
தீக்குச்சிகளைப் பயன்படுத்தி உரோமன் இலக்கங்கள் அமைத்த ஒரு சிறுவனுக்கு 30யை அமைத்திட 6 தீக்குச்சிகள் தேவைப்பட்டன. அவன் 28 யை அமைத்திட எத்தனை தீக்குச்சிகள் தேவை?

.....

www.lkedu.lk


(18) ஓடும் உதிரத்தில் வடிந்து ஒழுகும் கண்ணீரில் தேடிப்பார்த்தாலும் சாதி தெரிவதுண்டோ எனும் கவியில் உதிரம் என்பதன் கருத்து யாது?

.....

(19) மழை பெய்ய ஆரம்பித்தவுடன் அக்கா ஓட்டமும் நடையுமாக வீடு சென்று அடைந்தாள். இங்கு ஓட்டமும் நடையும் என்பது குறிக்கும் மிகப் பொருத்தமான கருத்து யாது?

.....

(20) தரப்பட்டுள்ள உருவங்களுள் மூன்று எதோவொரு விதத்தில் ஒற்றுமையானவை. ஒன்று வித்தியாசமானது அதன் கீழ்க் கீறிடுக.




1) 2) 3) 4)

(21) என்னிடம் உள்ள பேனாக்களில் இரண்டைத்தவிர எஞ்சியவை கறுப்பு நிறம், இரண்டைத்தவிர எஞ்சியவை நீலநிறம், இரண்டைத்தவிர எஞ்சியவை சிவப்பு நிறம். எனவே என்னிடம் உள்ள பேனாக்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கை யாது?

.....

வரைபையும் அட்டவணையையும் அவதானிக்குக.

தினங்கள்	விற்பனை ரூபாவில்
திங்கள்	100
செவ்வாய்	120
புதன்	110
வியாழன்	.....
வெள்ளி	90



(22) வரைபில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையில் உள்ள வெற்றிடத்தை நிரப்புக.

(23) அட்டவணையில் உள்ள தகவல்களுக்கேற்ப வரைபைப் பூரணப்படுத்துக.

சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

(24) நீரில் கரையாத பொருள்

1) உப்பு 2) சீனி 3) மெழுகு 4) மை

(25) நுளம்பின் மூலம் பரவும் நோய் அல்லாதது.

1) டெங்கு 2) மலேரியா 3) வாந்திபேதி 4) யானைக்கால்

(26) வடமாகாணத்தை சேர்ந்த ஒரு நகரம்.

1) பரந்தன் 2) காலி 3) கண்டி 4) திருகோணமலை

(27) கறையான் அமைத்த புற்றைத் தனது வீடாகப் பயன்படுத்துவது.

1) எலி 2) கறையான் 3) பாம்பு 4) முயல்

(28) சீவுளி எனும் ஆயுதத்தை பயன்படுத்துபவர்.

1) மேசன் 2) தச்சன்

3) சிகை அலங்கரிப்போர் 4) கொல்லன்


www.lkedu.lk

கீழே தரப்படும் சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.

(29) பாடசாலை நடவடிக்கைகள் ஆரம்பமாவதற்கு இசைக்கப்படும் கீதம் .....

(30) பொது நூலகத்தில் இரவல் பெற முடியாத புத்தகத்தை அங்கு இருந்து படித்து குறிப்பு எடுக்க உகந்த பகுதி .....

இவ்வுருவில் 5cm என்பது ஒரு மீற்றரைக் குறிக்கும்.



(31) இவ்வுருவின் சுற்றளவு யாது? .....

(32) இவ்வுருவின் பரப்பளவு யாது? .....

இலவசப் பாடநூல் ஒன்றைப் பெறும்போது எமது மனதில் தோன்றும் மூன்று தீர்மானங்களை எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது ஐந்து சொற்களாவது இடம்பெறுதல் வேண்டும். அவ்வாக்கியங்களின் எழுவாய் பயனிலைத் தொடர்பு திருத்தமாக இருத்தல் வேண்டும்.)


(33) .....


(34) .....


(35) .....

36 முதல் 40 வரையிலான வினாக்களின் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

(36) மாகாணம், நாடு, கிராமம், மாவட்டம் என்பதைக் குறித்துக் காட்டப்பட்ட சரியான அடங்கல் படம் எது?







(37) 8 # 4 = 6 * 2 = 16 ⊕ 4 எனும் கணிப்புக் கோவையில் # , * , ⊕ என்னும் குறியீடுகள் குறித்து நிற்கும் கணிப்புகள்.

1) +, ×, − 2) ×, +, − 3) −, ×, +

(38) கழுகு, சிங்கம், நாய், புலி, பசு, பாம்பு, தவளை, குதிரை, நரி போன்றவற்றில் ஊண் உண்ணி அல்லாதவை எவை?

1) பசு, பாம்பு 2) பசு, தவளை 3) பசு, குதிரை

(39) எறும்பு, தேனீ, காகம், கறையான், ஆந்தை இராமபாணம் போன்ற பிராணிகளில் புத்தகங்களை அரித்து சேதமாக்குபவை எவை?

1) எறும்பு, தேனீ 2) கறையான், இராமபாணம் 3) காகம், ஆந்தை

(40) இரு நூறாயிரத்து ஐந்நூற்றுறைம்பது என்பதை இலக்கங்களில் எழுதினால் வருவது எது?

1) 200, 505 2) 200, 550 3) 250, 050

www.lkedu.lk

மாதிரிப் பரீட்சை 8

1. 3
2. 2
3. 3
4. 2
5. 3
6. 2
7. 3
8. 4
9. 3
10. 4
11. உப்பு
12. இளநீர்
13. ஓட்டகம்
14. 1.
15. 4
16. 3
17 9
18. இரத்தம்
19. விரைவாக
20. 4
21. 3
22 80
23. அட்டவணையில் வரைபு 120 வரை
24. 3
25. 3
26. 1
27. 3
28. 2
29. தேசிய கீதம்
30. உசாத் துணை நூலகம்
31. $80cm$
32. $375cm^2$
33-35 கருத்துள்ள வாக்கியங்கள்
36. 1
37. 1
38. 3
39. 2
40. 2